சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருப்பேரூர்

பதிற்றுப்பத்தந்தாதி.

இது

ஷெடி தலத்தில் வசிக்கும்

அறுபத்துமூன்று நாயன்மார் திருப்பணி

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகளால்

இயற்றப்பெற்று

கோயமுத்தூர்:

ஸ்ரீமான் சிவ. மாணிக்கசுந்தரஞ்

செட்டியாரவர்களால்

கோயமுத்தூர்: நடேசர் அச்சுயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1916.

பாட்டு.	வரி	பிழை.	திருத்தம்.
4	4	பழமபொருளை	பழம்பொருளை
11	3 + 4	மிடரு	மிடறு
14	1	வன்பக்	வண்பவக்
36	2	தக்குங்	தக்குவங்
38	3	விட்டினை	வீட்டினை
41	1	மீவவுடலந்	மிவ்வுடலந்
96	4	லன்பா	லண்பி
98	5	எற்றுவரி	ஏற்றுவரி
	7	விறைநேய	வைந்தால்

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சாத்துக்கவிகள்.

திரிசிரபுரம் வரகனேரி வித்வான்

ஸ்ரீமத் சோ. வீரபத்திரபிள்ளையவர்கள்

இயற்றியவை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பூக்கு‡ளிணர் மலர்த்துடவைப் புடையுடுத்த திருக்காஞ்சிப்
புனித தீர்த்த, மீத்தவழும் புயல்பெயல்கை விட்டாலும்
வறப்பின்றி விளையச்செய்கள், காத்தமையப் படிந்தவர்
தீக் கன்மமொழித் தாள்கின்ற கடப்பாடுற்றேற நீத்தலிலா
தொளிரோரூர் திருவாரூர் மறைமுழக்கு நிறைபேரூரே 1

சொல்லாரு மொருகலமத் தலமகனைச் சூழ்ந்தாருஞ் சூழா
நின்ற, வெல்லாருஞ் சுகமாரு மியல்பாரு நலனாரு மிமை
யத்தாரு, மல்லாருங் குழற்பச்சை நாயகியா ரிடனாரு
மணியாருங்கம், வில்லாரும் பிறையாருமெமையாட்கொள்
படியாரும் விமலனார்க்கே (2)

கொங்குவள் நாட்டினடுப் பாளையத்தில் வேளாளர் குலத்
திற் றோன்றித், துங்கமுற வில்லறமாத் துறைபடிந்து சில
காலந் துணைந்தேயம்யா. வங்கதனைத் துறந்து துறந்தானை
யித்தலத்தி லறுபான்மும்மை, பொங்குதிருத் தொண்டர
டித்தொண்டுசிவ பூசையுமே புரியாநின்றே (3)

எத்துணையும் படித்தாலு மெவ்வெவர் †நேயுற்றாலு மென்
னேசாதிப், புத்திபொரு காலத்தும் போகாதென் றுணர்க்

இணர்-பூங்கொத்து நேய்-நேயம்

குமொழி பொருந்து மாறு, வித்தகவில் லறந்துடைத்தொ
ண் டறவறத்தைப் படைத்து மிவண் விளக்கமாகக், கைத்
தலத்தா விரவலர்க்குத் தன்குலமீ தெனவுநனி காட்டிக்
கொண்டே (4)

தன்னிகரி லாதுறையுஞ் சுப்ரமண்ய சாமியெனுஞ் சான்
றோனென்பாற், கன்னிகரும் வன்மனமுங் கரைந்துருகப் பு
னல்பெருகக் கண்ணூடின்பந், துன்னியகற் கண்டுபோற்
சருக்கரைபோ லமிர்துபோற் சுவையார் தென்சொன்,
மன்னியபாட் டியன்முறையே பதிற்றுப்பத்தந்தா திவழங்
கி னனல் (5)

இலக்கியமு மிலக்கணமு மெடுத்தாளுந் தருக்கமென வி
யும்பு நாலு. நலக்குமொரு சித்தாந்த சாத்திரமு மினைத்
தெனவே நன்குகாண்பார், கலக்கமற விந்நூலின்பொருள்
விரித்துக் காண்பவெனிற் காண்பா ரன்றி, யலக்கணுறுத்
தையப்பா டகற்றுதற்கு மலைவயுணர்வார்க்காகுமன்றே (6

முத்தியுறு பயனுதவ முளைத்தபவக் களைகட்டு முட்டில்
லாமற், பத்தியெனும் பயிர்தழைய வேண்டுமெனிற்பலவா
றுபகர்தலென்னே, நித்தியோர் முறையேனுமிந்நூலைப்
படித்தாலு நெஞ்சமீதே சத்தியமாய் நினைந்தாலுஞ் செய
வற்றாவி தன்பெருமை சாற்றுமாறே (7)

முத்தமிழின் றுறைபோய முதுக்குறையா ளர்களிந்தமுந்
நீர் வைப்பி, லெத்தனையோ பேரிருந்து மவர்கருத்தி லுறுத்
தாமலிமையாமுக்க, ணத்தனவர் தமிலிவர் தமுளத்திந்நூல்
செய்கவென வமைத்திட்டானே, லொத்தவிந் நூற்கொரு
நூலே யுவமையிட்டுக் காட்டுதலெற் குசிதமன்றே (8)

ஓதப்பயின் நூலை யெழுதாத வெழுத்தையிட் டோருருவ மாக்கிப், புகலத்தோர்க் குதவினுரெலழிற் கோயமுத்தூ ரிற்போந்து வாழு, மேதகைபி ராமலிங்கச் செட்டியார் த வப்பயனுப் விளங்கா நின்ற, மாதர்‡முலை மேலணியும் மா ணிக்கசுந்தரனும் வணிகன்றனே (9)

வெண்பா

மொழியிற் றமிழிறையின் முக்கண்ண னன்பின்
வழியிற்கண் ணப்பன்சீர் வாய்தல்—விழைபவே
தந்தானஞ் சுப்ரமண்ய சாமி பதிற்றுப்பத்
தந்தாதி யீதருமை யால். 10

கோயமுத்தூர் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமத் அ. கந்தசாமிப்பிள்ளையவர்கள்

இயற்றியவை

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

எல்லையிப் புவனம் பூத்த வின்னருள் வடிவப் பச்சை
வல்லியெம பிராட்டிக் கென்று வாய்த்தபட் டசன்றட்டே
பொல்லையி லார்வந் தாண்ட வதித்தவன் புருவமான
சொல்லையே மலராக் கொண்டு தொடைதொடுத் தணிந் தான்மாதோ (1)

அன்பெலா மானுக்காக்கி பருதி யவன்றந் தாளென்
றின்புலா மறுபான் மும்மை யிறையவர்க் காக்கிச்சிந்தை
யென்பொலா மணியே யென்ன விடையறுத் தியான
மாக்கி, வன்பெலாங் கடிந்தசுப்ர மண்யநற் சாமிதானே (2

---

‡முலை-முல்லை இடைக்குறை

அகங்களி துளும்பக் கண்க ளருவிநீர்த் தாரை வார
முகமலர்ந் துடல்பூ ரிக்க முடிக்கரங்கூப்ப வென்பு
நெகவினை யனைய கல்லா நெஞ்சமுங் குழைக்குமென்றாற்
றாருயிரின் கிதம்போற் பத்தி தழைத்த தொன் மறைக்கற்
பாற்றே (3)

வெண்பா.

அண்டிவரும் பேதை யாதரிக்கு நற்பேறைக்
கொண்டிருக்கும் பேறைக் குகன்பேறைக்-கொண்டவெங்க
டன்னேரில் சாமிதமிழ் காற்றும் பதிற்றுப்பத்
தென்னே யமைந்த வியல்பு.

திருப்பெரூர் ஸ்தானீகம்
பிரும்மஸ்ரீ இராமசாமிச் சிவாச்சாரியாரவர்கள்
இயற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மண்ணிடைநால் விளிற்கும் வான்பேரூர்த் திருத்தளியில் வயங்காநின்ற, தண்ணிலவு புனைவோற்குப் பதிற்றுப்பத் தந்தாதிதமிழாற்றந்தா, னுண்ணிறையு மன்பையெல்லா வுயிர்களிடத் துஞ்செலுத்து முரிமைவாய்ந்த கண்ணியனந் சுப்ரமண்ய சாமியெனு மெனக்கினிய கண்போல் வானே

திருப்பேரூர் சாந்தலிங்க சுவாமிகள் மடாலயம்
ஸ்ரீலஸ்ரீ சிதம்பர மெஞ்ஞான சிவாச்சாரிய
சுவாமிகள் இயற்றியது

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

திருவளர்தெய்வத் தீம்புனற்காஞ்சி மருங்குறை, செழும் பொழிற் போதித், தருவளர் பேரூர்த் தளியினிலமர்ந்த தற்பரன் பட்டிநாயகன்மேற், குருவருள் பெற்றுத் தறவு டைந்தடியார்க் குறுபணிச் சுப்பிரமணியன், மருவளர் ப திற்றுப்பத்தந், தாதிப் பாடினி தலைக் கனம் தோ.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருப்பேரூர் பதிற்றுப்பத்தந்தாதி.

காப்பு.

வெண்பா.

பார்பரவும் பேரூர்ப் பதிற்றுப்பத் தந்தாதி
சீர்பரவச் செய்யவருள் செய்யுமா—லேர்பரவு
மெட்டுக் குணத்தெம்மா னீன்ற வியமுகத்துப்
பட்டிக்க ணேசன் பதம்.

நூல்

திருவிற் றிருக்கு மணிமார்பத் திருமா றனக்குந் திசைமு
கற்குந், தருவிற் றிருக்குஞ் †சதமகற்குந் தலைமை யளித்
தா டனிமுதல்வன், மருவிற் றிருக்கு மலர்க்கூந்தன் மா
னை யிடப்பால் வைத்துவந்த, வுருவிற் றிருக்குந் திருப்
பேரை யுறைவா னென்னு ளுறைவானே 1

வானே முதலீ ரேழுலகும் வருந்தா தளித்த மலைமாது
தானே தழுவக் குழைந்தவொரு தனிமா முதலே திருப்
பேரூர்த், தேனே கட்டித் திரவியமே திரையிற் பிறவாத்
தெள்ளமுதே, யானே சரண மெனவடைந்தே னருள்வா
யருளிற் பெரியானே

---

† சதமகன்-இந்திரன்.

பெரியா ரெனவே மால்பிரமன் பிணக்குண் டிகலிப் பேதுறுங்கா, லரிதா மழலாய்த் தானேயென் றறிவித் தவர்பாண் டியன்முன்னர்ப். பரிபாய் நரிக டமையன்பர் பழங்க ணகற்றப் பணித்திடுதற், குரியார் பேரை முதல்வரெனே யுவந்தா ருகற்கு முரியாரே 3

உரியான் புலைநா யினுங்கடையா மொருவே னெனையு முவந்தாள,†வரியானறிந்தார் தமக்கறிதற்கடையார் தங்கட் கெஞ்ஞான்றுந்,தெரியான் போதி வனத்துறையுஞ் சிந்தாமணிதேங் கடுக்கைபுனை, துரியா தீதப் பழம்பொருளைத் தோய்வார் பவத்திற் றோயாரே 4

தோயா திருந்தைந் தொழிலியற்றுந் தூயோயெளியேயன் றொடர்பவத்தி, லோயா துழன்றே யூசலையொத் துய்யு நெறியொன் றொருசிறிது, மாயா தவமே யலைந்தலுத்தே னரசே யுனைநா னடைவதற்குத், தாயா யருள்செய் பசுங் கொடிசேர் தருவே பேரைத் தற்பரனே 5

பரனே துயர்கூர் கருக்குழியிற் பன்னா ளலைந்து பரிதவிக் கக்,கரனே கோட்டிச் சதுமுகனார் கணித்தென் றலையிலின் னுமொரு,வரனே யெழுத்தைப் பொறித்திடுதற் குன்னிற் புனற்க ணுறாமெழுத்தாம், வரனே யருள்க திருப்பேரூர் வாழ்வே மயனக்கப் படிமீதே 6

---

† அறிந்தார் தமக்கறிதற்கரியான், என்றார், ஒருகால் தன்னைப்புணர்ந்தார் கட்குச் சித்தவிருத்தி சுருங்குதலான் மீட்டும் உணர்தற்கரிதாகலின். ‡ உரனையெழுத்து உரன்-எய்-எழுத்து.

படியிற் பலவாம் பொருணசையாற் படரிந் திரிய வழிமெ
னது, படிவுற் றனந்தோற் பவத்துழலும் பாழ்வெவ் வினை
கள் படாமல், படிவுற் றனது தொழும்பாற்றிப் பதியக்
கதியிற்றிருவருளே. படிவுற் றிடமா றியற்றுதியால் பரிந்
து பேசைப் பதியானே 7

பதியே பரவுமுயர் போகிப் பைங்காருகஞ்சூழ் திருப்பே
ரூர், நதியேய் வேணிப்பரம்பொருளே நாதா நினதுநளிர்
கழலைக் காகியே புரியார் பசிநலிய தாயர்கூர்ந் தில்லந்
தொறுமுழன்று கதியே யிலராய்ப் பலியேற்றுங் கனமார்
பேறொன் றுடையாரே 8

பேரூரிலகு நவமணியே பிறவிப் பிணிக்கோ ரருமருந்தே
யாரூ ரடிகட் கிருநிதியே யன்பே யுருவா மண்ணூவோ
நீரூ டிலகு கடலூடு நிற்கு முலக பந்தமெலாங்
காரூ டிலகு மின்னனைவே காணவருள்வாய்பெருமானே

பெருமா னெனவுந் திருப்பேரூர்ப் பெம்மா னெனவும் பி
றங்கல்வரு,மொருமான்மருவும் பரனெனவுமுள்ளமுருகித்
துதிப்போர்க்குத், திருமா லயனிந் திரன்முதலாந்தேவர்
பதமுங் கடந்தபதந், தருமா லந்த குணங்குறிக ணந்த
விமலப் பெரும்பொருளே 10

வேறு.

பெரிய தீஞ்சுவைக் கடலிடை யெழுவிடப் பிணிப்பினு லை
யன் றுதை, கரிய மேனிய னுய்நின கழலுறக் கதுமென
மகிழ்ந் தன்னோற், குரிய தேவி‡நா ணிறீஇயது நின்மிட
ருணர்த்துமே லுலகெல்லாந், தெரிய நின்னருட்டிறத்தை
யா ரளவிடச் செய்வர்பே ரையந்தேவே 11

நாண்-மங்கலசூத்திரம்

தேவதேவனை யுமையொரு பாகனைச் சிந்தனை புரிகிற்போர்
யாவ ருற்றினும் பறிக்கருள் பேரையம் பதியுறை பெரு
மானை, மேவ லாரெயில் பொடித்தவெண் ணகையனை விழை
வொடு வணங்காதார், யாவ ராயினும் பல்பல வெடுத்தெ
டுத் தலக்கணுற் றலைவாரே 12

அலைநெ டுங்கடற் றுரும்புபோ லடியனே னளவிலாப் ப
வத்துளே, நிலையி லாதலை யாதுநின் றிருவடி நீழலை யரு
ளாமே, புலைய னேனைப் புறக்கணித்த கற்றிடிற் போந்
தெனை யருள்கிற்பா, ரிலையிரும்புவி மீதுயர் பேரையி லில
குமெம் பெருமானே 13

மானி னேக்கவொண் மதிநுதன் மடந்தைமார்வனப்பிலே
மயலான், வினை ஞாயினு நினகழ லிறைஞ்சுத லேய்ந்தன்
னருள்வாயே, பானி லாவணி சடையனே பசுங்கொடிபா
கனே யுயர்பைங்க ணானி னேர்கொடி யாயருட்பேரைவா
ழாதியந் தமிலானே 14

அந்தி வண்ணனே யளிர்மதி சடைமிசை யணிந்தருள்
திருப்பேரு, ரெந்தையேயெனை யிடையறா துள்கியேத்தெ
டுக்கலா நிலைத்தாமென், சிந்தையவ்வணஞ் செய்திட வலி
யனேனு செழுமலர்த் தவிசின்மேன், முந்தை நான்முறைமு
தியல னிச்செயல் முடியுமா றறியேனே 15

அறிவ றப்பொதி யாணவத் தொடரினல் யானென தெனை
வேவையம், பொறிவ ழிப்புலன் றொறுமுழாம் புகுதமெய்ப்
புண்ணிய முணர்போத, நெறியோ ரீஇயுழ னீசனேற்
குனதடி நேயமே வுறநெஞ்சம், பெறவ ருள்புரி பேரை
யம் பதியுறை பேரருட் பெருமானே 16

DR. U.V. SWAMINATHA

மானையோர்கரத் தேந்திய வள்ளலை மதிநதிச்சடையானைத்
தேனை யாரமிர் தத்தினை யின்னருட் செல்வனைத் திருப்பே
ரூர்க், கோனை நாண்மலர் கொய்துபூ சனைசெயக் குறித்தி
லா தவமேயிவ், வூனை யோம்புதற் குலகினின் மறஞ்செறிந்
துள்ளநா ளுழைத்தேனே 17

உழையி ருடனி லூர்குறித் தேகுவோ னுணர்விலா தவ்
னுற்ற, குழியி டைப்படு மாறுபோல் பேரையங் குழகனை
நினதாளை, யொழிவி லாதுறப் போந்தவ னெண்டொடித்
தடக்கைவா ளுதற்றேமென், மொழிம டந்தய ராதரப்
பாவையில் வீழ்ந்தியான் முடிவேனே 18

முடிய வன்பத்தொடர்வழி முறைவரு முகிழ்த்தநின் றொ
ழும்பாற்றிப், படிய நின்பத மலர்வயிற் பருகவான் பகமுறு
பசுந்தேனை, யடிய னுக்கருள் செயத்தகும் பருவமீ தடிக
ளே கரியீந்த, †மடிய ணிந்தருள் பேரையில் மேவிய மாசி
லா மணியேயோ 19

மண்ண கழ்ந்தும் வான் முழுவதுஞ்* சுற்றியு மாலயன் கு
றித்திட்ட, வெண்ண முற்றிலா திகல்வலி குறைந்தனரென்
னினு மின்னயந் தேழை, கண்ண கன்றபே ரையினினைக்கண்
ணுறீஇத் துதிக்க மேனாளிற், பண்ணி முற்றிய மெய்த்த
வம் நன்றுகாண் பாயுமால் விடையானே 20

வேறு

பாயு§மால் விடையானே பரம்பரனேபசுபதியே பண்ணார்
பேரை, மேயமா தவப்பயனே ‖ வினையொழிக்குங் குருமணி

வன்பவத்தொடர் முடிய, வெனக், கூட்டுக.
†மடி-போர்வை. § மால்-விட்டுணு,, எனவே மால்விடை
யான் என்றது, பண்புத்தொகையாமாறுணர்க.
‖ வினை-ஈண்டு, தீச்செயல்.

MAHAMAHOPADHYAYA
...NATHA IYER LIBRAR

யே மேவிநின்னை, நேயமாய்ப் பரவியரு ணெறிமேவு மதி
விலனாய் நிலையில்லாத, மாயமாஞ் சகத்திலுறு வாழ்வதனை
மதித்தடியேன் வருந்துகேனோ 21

வருந்தியருந் தவம்புரிவோர் மலர்ந்தவித யாம்புயத்தை
மருவியின்ப, மருந்தவருள் சேவடியென் னகத்தாமுறப் ப
ணித்தருளி யையாவின்னை, திருந்துகதி யுறக்காட்டித்
தீவினைக ளறவோட்டிச் சிலம்பிலம்மைக், கருந்துணையே
பேரையுறை யம்மானே யடியேனுக் கருள்செய்வாயே 22

வாயுறநின் புகழ்வாழ்த்தி மலர்தூவிக் கரங்குவித்து வண
ங்கி யேத்தி, நேயமாய் நின்பெருமை நினைந்துநினைந் தெ
னதுள்ள நெகிழ்ந்து நாளும், பாயவிழிப் புனலுகுத்துப்
பரவுமொரு பணியலது பகரிற் பேரை, மேயபா சிவமே
யான் விரும்புகிலேன் பிறிதுமொரு வேறுபாடே 23

வேறாக வினையேனை விட்டனையேற் கெட்டலைவேன் வெய்
யமாயை, மாறாக வெனைத்தனது வசமாக்கிமருள்பெருக்கி
வருத்த வந்தோ, நீறாக மணிந்தருளு நின்மலனே யருள்
கூடு நெறிதா மாதோர், கூறாக வைத்ததிருப் பேரையரசே
நின்னைக் குறுகினேற்கே 24

குறுமைசெறி ‡குரம்பைதனை யோம்புமதே பொருளாகக்
குறித்தெந் நாளுஞ், சிறுமையுறு தொழிலியற்றுஞ் சிற்றி
னத்தைச் சேராதுன் றிருத்தாண்மேவி, நறுமைநிறை தி
ருப்பேரூர் நாயகமே சுகமடையும் நாட்டம் வைத்தேன்
வறுமைகெட விக்கணமே வந்தருளிச்சிந்தைமலிமருடீர்ப்
பாயே 25

தீர்க்கருள்வாய் திறன்மாயா §திமிரமெலா மகன்றிடநின்

‡ குரம்பை-தேகம். § திமிரம்-இருள்.

றிருக்கண்ணனே, பார்த்தருள்வாய் பரிவாகப்படி மேற்சற்
குருவாகிப் பதமென் சென்னி, சேர்த்தருள்வாய் சித்தாந்
த முத்திநெறி சேரவருள் செய்தேயென்னைக், காத்தருள்
வாய்கருணைமலர்கற்பகமே திருப்பேரூர்க்கண்ணுளானே

கண்ணதனைப் பறித்தனது கழற்கமலத் தருச்சனைசெய்
கரிய மேக, வண்ணனன்பு தனக்கிரங்கி மாற்றலரைத் தெ
றுமாழி வழங்கு மந்தி, வண்ணனின திருவடிக்கண் மலர்
தூவியிறைஞ்சாத வழக்கேக யென்றன், வண்ணமதே யாறு
லும் வந்தருள்வாய் திருப்பேரூர் மருந்தண்ணனே 27

அன்னையப்பா வென்றழைத்தே மம்மைதிருக் கானஞான
வமுதமுண்டு, சொன்னையப்பா மறைப்பொருளைத் தொகு
த்தருட்பா மொழிகாழித் தோன்றலார்த, மின்னிசைப்பா
வினைக்கேட்க விசைந்த திருப் பேரையப்பா வினைந்துவாடு
மென்னை aயப்பா வீட்டற்றென் றிரந்துரைக்கும் புன்மொ
ழிக்கு மிரங்குவாயோ 28

இரக்கமே வியற்கைவடிவாகவொளிர் பரம்பொருளென்றி
யம்ப வந்நாள், கரிக்குருவி நாரைமத கரிநரிகாகஞ்சிலந்தி
கான மஞ்ஞை, குரக்கெறும்பு கோம்பி bபச மொடுநாகம்
போற்றவருள் கொடுத்ததெய்வ, மருக்குலவு திருப்பேரை
வள்ளானிற்றொழுமுத்தி வாய்க்குநதானே 29

வாய்மைநெறி யறியாது cமேற்கடத்தையொத்தலைந்துமன
மே நாளுந் தீமைசெறி பைம்புலனைச் சேர்ந்து நசைச்சே
றலைந்து தியங்காதந்தத், தூமறையுந தொடர்வரிய தொல
பேரைச்சோதியடித்தொண்டு பூண்டே, யாமையென வக
மடங்கி யஞ்செழுத்தி னடைவுணர்ந்தீண் டமர்வாயன்றே

---

a அப்பா-இரக்கக்குறிப்பு- b அசம-ஆடு. c மற்கடம் குரங்கு.

வேறு

அன்றலர்சொரிந்தோ னழனுதல் விழியாலழியவு [d] மளியு
ளமை பெருக நின்றனைச் சிலையா லெறிந்தவன் கதிமே
னிற்கவும் புரிந்ததன் பென்ப, தொன்றுநா னின்பாற் கு
றையிரந் தேழை யுய்ந்நெறிக்குதவு கவையா, வென்பது
மஃதே போதிமாவனத்திலிலங்கெழிற் [றனியிலார்பவனே

புவங்களெண் ணிலவாய்ப் படியிலுற் பனித்துப்பதிதனோர்
புவத்திலும் பரிவாய்த் தவங்களைப் புரிந்துன் சரணபங்
கயத்தைச் சார்ந்திடா துலகினை மதித்தே ழுயவந்தனிலலை
ந்தே னத்தனே கண்பார்த் தருடிருப் பேரையம் பலத்தி
னவந்தரு பரமா னந்தமெய்ஞ் ஞான நடம்புரிந் தருளு
நாயகனே 32

நாயகன் பச்சை நாயகிக் கொருபா னல்கிய புனிதன்மா
லயற்குத், தாயகன் பேரைச் சங்கரனைவைக்குந் தண்ண
ருள் கொழித்திடுந் தலைவன், றாயபொற் சரணப் புணைபி
டித் திந்தத் தொல்பவக் கடல்கட வாது, நீயெனே வாளா
நின்றனை பேதை நெஞ்சமே யென்செய நினைந்தே 33.

தேனுலா மிதழித் தொடையலார் சுடையுந் திருத்தகு வி
சித வாணுதலு, நானவார் கூந்தற் றெய்வமங்கையர்நாணு
ட்டிய கண்டமு மிமைய, மீனவாங் கண்ணி தழுவியசெய்
ய மேனியும் விளங்கவம் போதிக் கானவா மொருவன் வி
ரைந்தெனதுள்ளங் கலந்தனன் கழிபவா ணவமே 34.

---

d அளி அன்பு,

ஆவலாற் றிருவைந் தெழுத்திய லுணர்ந்தே யன்பொடு
மலர்பறித் தடியிற் றூவிநின் றிருத்தா டொழுதுள முரு
கித் துணைவிழி களிற்புனல் சொரிந்து,பாவிறு னினது ப
ண்பெலா மமையப்பாடிமே லென்னினுமெளியே,னுவவி
ல்துயரங் கெடவருள் பேரையுத்தமா நித்தியப்பொருளே

நித்தியப் பொருளை நின்மல விளக்கை நினைபவர் நெஞ்சை
விட் டகலாத், தத்துவங்கடந்த மெய்த்தவ மணியைச்சச்சி
தாநந்தநல் வடிவைக், கைத்தல மமர்ந்த நெல்லியங் கனி
போற் கண்ணுறக் காண்டலுந்தேடி, வைத்தபொற் குவி
யு லென்ன மெய்ஞ்ஞானம் வாய்த்தது போதிமாவனத்தே.

வனிதையர் நகையுங் குழவிமே லார்வு மண்மனை †வெறுக்
கைமேல் விழைவுங், கனைகட லுலகிற் பெறற்கரு மக்கள்
காயம தெடுத்துமுள் ளேன்றிப், புனிதமெய் யடியார் சிவ
சிவ வென்னப் போற்று மெம்போதிமாவனத்துப், பனி
மதி வேணிப் பரமனைப் பணியாய் பாவிக ளடைதல்பாழ்
நரகே 37

கேவல நிலையின் மலவிரு ளிடையிற் கிடந்தபல் பசுக்களை
யெடுத்தே, யாவலாய்ச் சகலந் தனிலுடல் கரண மாதிய
வளித்துநற் சுத்த, மேவரப் புரிந்து வீட்டினை யுதவு மெ
ய்ப்பொருள் கைப்பொருளாக, வாவது கருதிற் போதி
சூழ் பேரை யம்பதி யடைவர் மேலவரே. 38

வரையிலார் பசிய மரகத வல்லி மருவிய கற்பகத் தருவே
கரையிலாப் பெரிய கருணையங் கடலே காமனைக் காய்ந்த

---

† வெறுக்கை-செல்வம்.

கண் மணியே, யளவிலா டரவம் புனைக்கருளரசே
யடியவற் கெளிய னென் றுனது, விரையுலா மலர்த்தா ள
டைந்தனன் வினையை விட்டி யருள் பேரை விண்ணவனே 39

பேரையம் பதியிற் கோயில்கொண் டமர்ந்த பிஞ்ஞகா சா
தகப் பறவை, காரையே நாடுஞ் சக்கரவாகங் கதிரிளந்
திங்களை நாடும், வாரணி முலையார் தங்களைக் காம மயக்கி
னோர் நாடுவர் வழங்கு, நீரரை வறிஞர் நாடுவ ரடியே னாடு
த னின்னருள் விளைவே 40

வேறு

வினையி னைப்பொசித் தொழியுநாள் வீயுமிவ் வுடலந்
தனைநி லைத்தெனச் சலனமுற் றயர்ந்திந்த தமியே
னுனைநி னைந்துநைந் துருகுமெய் யுழுவலன் புறமேவார்
நினைவெ னக்கருள் புரிதிருப் பேரையின் மலனே 41

மலம ருவிய மனமெனு மற்கட மைந்து
புலம ருவிடப் புந்திநைந் துன்னடி பொருந்தா
தலம ருமெனை யஞ்சலென் றருள்புரி பேரைத்
தலம ருவிய சச்சிதா நந்ததற் பரனே 42

பரம வற்கெனைப் புரப்பது வெனத்தினம் பணியுந்
தரமி லாதயர் சழக்கனே னென்னினுந் தனி|| நால்
கரன யிற்கரக் கந்தவே டந்தையம் பேரை
யரனெ னக்கரு ணாலந்தர வஞ்சுவா னலனே 43

நால்கரன் தூங்குகின்ற கையன்,-விநாயகக்கடவுள்.

DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
3975
(8150)

வான நாடரும் நாடரும் போதிமன் றிடத்தின்
ஞான நாடக நவிற்றுநின் கனகமால ரடியை
யீன நாடவந் திருவருள் செய்திடிவ் வுலகத்
தூனை நாடுத லொழிந்துயர் கதிமிசை யுறவே 44

உறுத றுய்க்கலா தியல்வலா முன்னரு ளெட்டப்
பெறுத லன்றியிப் பேதையேன் பெறத்தகுந் தாமோ
சிறுத கவினேன் சிந்தைநின் சீரடி மலரி
னிறுவு மாறருள் பேரைவாழ் நித்யதத் துவனே 45

‡தத்தைமென்மொழிப்பாவையர் தமையடைந்தவர்வெண்
முத்த வாணகை யிடைவரு முறல்வாய் முகந்து
பித்த ரோகியுன் னிழிதகைப் பெரும்புலை யனையே
பொக்க லங்கிடா தருடிருப் பேரையுத் தமனே 46

உக்க மக்கனி முகவெனப் பேரைவா ழொளியைப்
புக்க கத்தினி லெழுதியு நாவினிற் புகன்றுஞ்
சிக்க மீதுற வழுத்தியுஞ் சிந்தனை புரியா
ரொத்த லத்திடை மேனினு †மிசையிலா தவரே 47

இசைய ளிமுர வினமலர் கொய்துபொன் னடியின்
மிசைய ணிந்துளங் குழைந்துமெய் சிலிர்த்திரு விழிநீர்
கசிய நந்திருப் பேரையங் கடவுளைச் சேரா
நசையில் மானுடப் பவத்தினு நாய்ப்பவ நலமே 48

நலந்த னிற்றிகழ் நாகரும் நாடரும் பேரைத்
தலந்த னிற்சிவ சங்கரன் றொழு தணைந்து
நிலந்த னிற்பல தெய்வத நேயமுற் றலைவார்
பலந்த னிர்த்திளங் காயுணும் பண்புவேய்ந் தவரே 49

தத்தை-கிளி. †இசையிலாதவர்-புகழ் இல்லாதவர்.
பலம்-பழம்.

வேளை யூதிப்பல் பசுக்களை விரைந்தடிப் படுத்தி
மாயை மாப்பசுத் தன்னையு மலரடிப் படுத்துந்
தாயை நேர் இருப் பேரையஞ் சாமியிப் புழுத்த
நாயை யுமிகழா தருள் வானருணலமே 50

வேறு

வானாதி யைந்து பூதங்க ளாகி மறைநாலு மேவி யுணரா
ஞான விலாச மயமாகி யன்பர் நாட்டத் திலங்கு மணியே
தேனாடு போதி வனமீ தமர்ந்த சிவமே விரைந்து சிறியே
னூனாடு மிந்த வுடலாடு முன்ன ருனைமே வுபாய முரையே

உரையற்ற மோனதுறவோ ருளத்தி லொளிர்கின்றசோதி
வடிவே, புரையற்ற போத மயமாய் நிறைந்த பொருளா
ன பேரை யமலா, தரையுற்ற போக நிலையிற் கிடந்து த
ளர்வுற்ற பேதை நினது, கரையற்ற வின்ப நிறைவுற்றபாத
கமலத்தை நாடவருளே 52

அருளத்தனாதிபுரி மேவுமீச னனையாகி யென்முதவு
குருளைக்கிரங்கி முலைதந்த தந்தை குறியற்ற வாதிமுதல்வ
னிருளைப்பெருக்குமிகலாணவா தியிடையிற்கிடந்துசுழலு
மருளிற் றவிக்க வடியேனை விட்ட வகையென்கொலேது
மறியேன் 53

அறிவே பழுத்த கனியே யினித்த வமுதே வடித்த மது
ரச், செறிவே றுதற்க ணழலா லெரித்த சிவமே கருப்பு
வில்லை, மறிவேய் கரத்த வுயர் பேரை யத்த வனசத்தை
யொத்த கழலைக், குறிவேறு பட்டு நமன் மேவு காலை x கு
றைகோ ளிலாம லருளே 54

மாயை-மாப்பசு-திருமால், x குறைகோள்-இரத்தல்

அறமென்ப துள்ள மதிலை யுதித்த மயலார் தமக்கோர
னுவும், பெறலென்று மொன்று மெளியாத பேதை பேரா
ப்பதிக்கணிறைநின், றிறமொன்று முன்னி நெகுமன் பி
லாத சிறியேனையாள நினையா, யுறவென்று மிலைத்து பணை
பென்று மென்று முணராத ஞானவுறவே 55

உறுமா தரத்தோ டுனையே வழுத்து முளமே யளிக்க
வொழிபா. தொறுமா தவத்தி னிலைதேர வெற்கோர் துற
வே யளிக்க வினையா, மறுவாதை யற்று விடுமாறு துற்ற
மதியே தழைக்க வருளைப், பெறுமா றளிக்கவருண் மேனி
கொண்டு பேரைக்க ணுற்ற பெருமா 56

பெருமா வெருக்க மிசையேறி வட்ட நிலமேபு ரக்குமர
மருமா மகத்தை யடைவே யியற்றி யமரேச னுற்ற வள
முன், திருமார்ப னுற்ற வொருசீரும் வேதனுறு சீர்களான
வெவைவையுங். ‡கருமா வுரித்த வொருபேரை யத்தனடியார்
கணிப்ப திலையே 57

இலைகாய் கிழங்கு புனலையருந்தி யிகலையமின்றிநெடிய
மலைமே னெருங்கு முழையூ டியற்று வளர்மா தவத்தி ன
டையு, நிலையே நினைக்கிலொருபோ தளிக்கு ||நிகர்பேரை
யத்த னிடமன், பிலையே யெடுத்த பவமே வியர்த்த மென
வே யிசைக்கு மறையே 58

மறையா கமத்தி னுரையே லதுத்த வழியே வழுத்தியிரு
தா, ளிறைபோ துளத்தி னிடையே யிருத்த விலையேனு
முற்ற வெளியேன், குறையே யிரத்த றனையே குறித்த
விலையேல் குணிப்ப தெவரே, கறையே களத்தி லுறைபே
ரை யத்த கனிவோ டிரங்கி யருளே 59

‡ கருமா-யானை, || நிகர்-ஒளி.

அருளை குறித்த வடிவாகு மென்ன வருணூல்க ளோது
மரிய, பொருளை யுயிர்க்கு ளுயிராய் நிறைந்த புனிதா பு
விக்க னடியேன், மருளை யளித்து மொருமாய வஞ்சமதி
லே வருந்தன் மாபோ, தெருளை விளக்கி யுயர்பேரை மே
ய சிவமே செலுத்து னருளே 60

வேறு

அரும்பெறலொன் றேழைக் ககப்பட்ட தப்பெரிய
னரும்படியோ வாக்கு மனமுங் கடந்த வொரு
பெரும்பொருளு மந்தன்னைப் பேசி லுயர்முக்கட்
கரும்புதிருப் பேரூர்க் கனகா லயம்புகவே 61

வேலை யுலகை விரைந்துசுற்றி யோடினும்பன்
னூலைப் பயந்தரிய நுண்ணறிவு மெய்தினு
மேலைச் சிதம்பரத்தின் மேய பரமனிரு
காலைப் பிடியாரைக் கைப்பிடிக்கு மாணவமே 62

ஆணையிடு வேனினக்கே யாட்செய்யுங் கொண்டனெனக்
காணிற் றிருப்பேரைக் கண்ணே யெளியேனை
மாணார் நினது மலரடிக்கட் பூட்டிவிட்டா
லாணவங்கொண் டென்று மலைந்து திரியேனே 63

ஏனோ கடைக்க ணிறையுஞ் செலுத்தாமன்
‡மேனோக்க மிட்டாய் விரைந்துதிருப் பேரூரில்
வானோர் மொழிகேட்டு வந்தமதனைப்பொடிப்ப
தானோப் நினக்குலகி லன்புசெய வந்தேற்கே 64

வந்தித் திலைபோதி மாவனத்தெம் பரனடியைச்

---

‡மேனோக்கமிடுதல்-பராமுகமாயிருத்தல்.

சிந்தித் திலேனாளுஞ் சென்றா லயஞ்சூழ்ந்து
முந்தித் தொழும்பின் முறையறியா மூடநெஞ்சே
[illegible]ரினமன் றண்டகர்க்கென் செய்வாயே 65

என்செய்வல் பேதை யிறைவா வெனதுசொந்தப்
புன்செய்கை யாரப் புகுந்துவெட்டி போர்திருத்தி
மின்செய்க பத்திப் பயிர்விளைக்கும் வேளாண்மை
யென்செய்கை யென்றா ரிலையேற் ‡பிழைப்பதற்கே 66

பிழையே புரிந்தலைந்து பேய்போலப் பூவுலக
முழுதும் பலச்சரக்கை மூட்டைகட்டிக் கொண்டுவந்து
விழைபடைந்தே னின்னையெனை விட்டுவினை விற்செலவாய்க்
கழிவதெவன் பேதைக் கதிர்மணிகள் விற்றேனே 67

விற்றுண்டு மொன்றை விளக்குண்டு மெப்பறியார்க்
குற்றடிமை யாக வுழைத்துண்டும் வாழாமன்
முற்று நினது முழுத்தொண்டி லார்ந்தவெனைப்
பற்றுங்கொல் பேதைப் பரமபவச் சங்கிலியே 68

சங்கக் குழையுஞ் சடைமேற் சலமகளுந்
திங்கட் கொழுந்துந் திருக்கரத்தின் மான்மழுவுந்
துங்கவெண் ணீறு துதைந்தவருட் கோலமுமாய்த்
தங்கின னெனெஞ்சில் தனிப்பேரூர்த் தற்பரனே 69

பரிந்துன் விழைவின் படிநடக்கும் பண்பின்க
ணிரிந்தநெஞ்சத் தார்துன்ப மெய்துதல் மெய்யாமெனவே
தெரிந்திடவோ ||நந்தித் திருக்கே வெழில்வதனஞ்
சரிந்துவிழச் செய்தாய் தனிப்பேரை வாழ்வாயே 70

---

‡ பிழைப்பதற்கென்செய்வலெனக் கூட்டுக. || சிலசி
ன நந்திவதனஞ்சரிந்து விழச் செய்த சரிதம், பேரூர்ப்
ராணம் டன்னுப்படலத்தா லுணரப்படும்.

வேறு

வாயிற் புலைசெறி யுடலிற் சுழலுறு மனதிற் கபடற நெறி
மேவு, நாயிற் கடைபடு தீமெய்க் குணதரு னலமே
நல்காயே, மாயக் கவர்கொடு ஞாயிற் பொடிபடு மாறேற ந
கைபுரி மாதேவே, தாயிற் கருணைய னேயிப் புவிதொழு
தண்பே ணாயிலுறை யெங்கோவே 71

கோவே யருணிறை கடலேதுணமலி குன்றே மன்றிடை
நடமாடுந் தேவே செழுமறை முடிமே வியபர சிவமே த
வர்தொழு முனைபாகா, மூவே டணைமுத லுறுவா தனைக
ளின் முட்டுண் டுழிதரு முழுமூட, னாயே னையுமுயர் கதி
யார் தருவரு ளரசே பேரையி லம்மானே 72

மானா டெழின்மக வேளே வடதிசை மகனே வளர்தரு
வேயென்று, தேனார் கவிபல புலவீ ருமியிடை செருழுங்
குறுநோயு மீயாத, கோனா நிதியினர் மீதே புகல்கவி
றுங்கட் கெதுவிழை வுயர்பேரை, ஞானா கானே யமைத்
தோர் கவிதனை நவில்வீர் தரு‡மதனைத்தானே 73

தானா கியபர சிவமே முத்தொழில் கருமா றயனரி யானா
யும், வானா யனல்புனல் மண்கா லாயும் வயங்கும் போதி
வனத்தானே, மேனாள் வினைகெட நானா னிலமிசை மேவிப்
பலவினை புரியாதே, யானா னினதடி யற்கே பணிபுரி தரு
மா றருளுதியையாவே 74

வேதத்தடைவரு நிலையுங் குறுகினர் விழை†பெத்தகைய
வரானாலும், மேதற்குரியவ ரெனநின் சிரமிசை மிளிருஞ்

---

† அதனையென்றது விரும்பிய தொருபொருளை எத்தகை யாரானாலும், என்றதற்குப் புண்ணியபாவச் செயலதனையு டையவரானாலு மெனப்பொருள்படு மாறறிக.

(8159)

சகரரையுய்வித்த, ‡வோதப்புன†லிறை மனையைப் புணர்
மதியுணர்வித்திட நினையுணராதே, பேதைப்படுவதுமென்
னே பேரையிலீசா விருநிலநாதாவே 75

மேகந் தவழுப ரிசைமே லடையினும் வியனு லகிலுமு
ழன்றோடி, யாகங் குறுகி யொளித்தா லுமறி கலுங் க
ருமன் விடானன்றிப், §பாகம் பெறுவது மிலையெ றிலை
படியப் பழமல மமாங்கா, ளேகன் போதி லனத்தரு ளிணை
யடி யெய்தீர் விரைவினி லுய்வீரே 76

||எட்டில்வரைந்த வெழுத்தா நின்னை யிறைஞ்சற்கென்னு
பறுநரின்பந், தீட்டியகல்வி னெழுத்தாமவ்வழி சேர்ந்தோ
ர்க் கிருதிற னும்பற்றார்க், கோட்டிய நீரி னெழுத்தாமெ
ன்ன வுணர்ந்தே தொழுமொரு சிறியேற்கு, வீட்டியல்
காட்டாய் போதிவனத்தொளிர் விடாஞானவிளக்கேயோ

விளைவைத் தெறவொரு கன்றாலெற்றிய மேலோன் காண
நிருத்தஞ்செய், தளவக் குறுநகை பாகா வடிகேள் சாரும்
எபிறவா நெறியுற்று, மளவில் உகப்பலை கொள்ளா தென்று
மடைந்தின் பார்தா றுகர்வானில், விளவற் கந்நெறி யருள்
வாயென்ன வியப்புங் கூற்றுவியப்பாமே 78

மேனி தளர்ந்திரு கால்கை யயர்ந்திரு விழிக ளிருண்
டொருகோ லூன்றி, நானில மீது தளாடி நடந்திடு நாவள

---

‡ஓதப்புனல்-கங்கை, † இறைமனையைப்புணர்மதி - சந்
திரன். § பழமலம் பாகம் பெறுவது இலை-பெணக்கூட்டுக
|| எட்டினெழுத்து-சிறிது நாழினழிவது, கல்வியினெழுத்து
அழியாதது. நீரினெழுத்து உடனேயழிவது. எபிறவா நெ
றி-பேரூர்ப்பரியாயங்களிலொன்று. உகப்பலை-துக்கம்

MAHAMAHOPADHYAYA.

ஞங்குறி நாடாமன், மேனிலை நின்றற ஞர்தொழி லாளிக
ள் மேனிமென்னைறுபி லெம்மானே, நானி னடைக்கல மெ
ன்னினு மாதிபு மேசர்வி னைந்து நயந்தருண்மே 79

மேருவரைச்சிலை கோடியகற்கொரு விடைதனை யத்திர
மாக்கொண்டோ,† யிருநெறிக்கடையாரெயின் மூன்றையு
மெங்க டயாபரனேமேனுள், காருவனத்திலு மோர்நட
னாம்புரி சலச மலர்ப்பதனே பெருர்க், காருறழ் சுந்தர
னேயனிபாய்கின தன்பர்கள் கைக்கொளும்வர்ழ்வினையே

வேறு

வாழ்வை யுன்னி வருந்தி மதியிலா
தேழ்ப வத்தி னிடர்ப்படு மேழையேன்
றாழ்வ கன்றுன் சரண்டனைச் சார்ந்திடுஞ்
சூழ்வு சொற்றருள் பேரையஞ் சோதியே 81

சோதி யுன்னடிக் கொண்டர்க்குத் தொண்டுசெய்
நீதி யோர்க்கு நெறிநின் றிடாத வென்
தீதி யாவுங் களைந்தருள் செய்க நற்
போதி மாவன மேவிய புண்ணியனே 82

புண்ணி யத்திருப் பேரைப் புனிதனை
நண்ணி வாழ்த்துத லன்றெறி யன்றியிம்
மண்ணிற் பற்பல தெய்வதம் வாழ்த்தல் செம்
புண்ணீ ரீயுறு புன்னெறி நாடிலே 83

நாடி மாரு ளானந்த நாடக
மாடி நின்றுங் கன்பு செய் வார்தமைக்
கூடி மாழு குறித்தருள் பேரைவாழ்
கேடு வார் செவி சூடிய வள்ளலே 84

---

† அடையாரெயின்மூன்றையு மிருநெறிக் கணைகூட்டி
முடிக்க.

37 10 (8450)

வள்ள லேநின் மலரடிக் கன்பென
துள்ளத் தூடில தாயினு முன்னருள்
வெள்ளத் தூடுறும் வேட்கை யொழிந்திலே
னெள்ளி டாதருள் பேரையி லெந்தையே 85

எந்தை யாயென யின்றரு டாயுமாய்ச்
சிந்தை யாகுலந் தீர்த்தருள் *தேசியாய்
வந்து பேரையில் வாழ்பட்டி நாயக
னெந்த வேளையு மென்னுள் ளிருப்பனே 86

இருத லைக்க ணெறியுறு மிந்தன
மருவி நாப்பண் வருந்து மெறும்பெனத்
தரையின் மீது தவித்திட வின்றியே
பெரிது வந்தருள் பேரைப் பரமனே 87

பரம னேநின் பழவடி யாரொடுந்
தாமி லாவெனை யுந்தடுத் தாண்டுநற்
§றிரம ளித்தருள் செய்யபொன் மேனியி
லரவ மார்த்திட்ட பேரைய மண்ணலே 88

அண்ண லைப்புர மூன்று மழலெழப்
பண்ணும் வெண்ணகைப் பேரைப் பரமனை
நண்ண லாதபுன் ஞயனை யாரையே
யெண்ணில் மேவு மியம்பரு மின்னலே 89

இன்னன் மேவி யிடர்ப்பட லேழையே
னென்ன வின்றல நீயறி யாதல்
¶பன்னு பேரைப் பதிவள ரீசனே
யுன்னு வாயொழிந் திப்பவ மோடவே 90

*தேசி-குரவன் § திறம்-கதி. ¶ பன்னுதல்-துதித்தல்

வேறு

ஓட்டெடுறவா நந்தவெள்ளத் ததும்பியுள்ள முவந்துநாரத னேத்து மொருவாபோற்றி, வாட்டமல பந்தமற நினைந்து காலவன் வழிபட் டருச்சித்த வள்ளால் போற்றி, நாட்ட விதிப்பரிமொழியை நயந்துமேவி நனிர்காமதேனுதொழு நாதா போற்றி, கோட்டமிலாச் சுரர்பசுவின் கன்றுவிந்த குளப்பினெழிற் சுவடணிந்த குழகா போற்றி 91

போற்றிநெடு மானடனங் காண்பான் வேண்டப் பொரு வருகோ முனியாகப் புரிந்தாய் போற்றி, விற்றிருந்த வ யன்பட்டி முனிவனுக வேதமுறை தெரிந்திடச்செய் விம லா போற்றி, நாற்றிசைக்க ணருள்விரவப்போதிமன்றுள் ஞானநா டகநவிற்று நம்பா போற்றி, பாற்றரிய வலிகெழு தானவரால் வானோர் பயமடையாத் தாண்டவெழிற்பரனே போற்றி 92

பரசிமுரு கனைமருதச் சிலம்பிற் றேவர் பாதகச்சூர் தன் பொழியப்பணித்தாய்போற்றி, விரசுகொடுஞ்சமதிபெரும் பாவம் விட்டிவிடாத சிவலோகத் துய்த்தாய்போற்றி, அ ரசொருவன் முசுவதன மாற்றிமக்க ளானனமார் தரச் செய்த வடிகேள் போற்றி, சார்பதிமே வியசாபமொழிந் து முன்போற் றுதைபோக நுகர்ந்திடச்செய் துரையே போற்றி 93

அருவியுறு கரிகாற்கிள் ளிவைமே வுற்ற தோலாத கொ லைப்பழியைத் தொலைத்தாய்போற்றி, மருவியநம் வன்

---

* இது முதல் 98-வது செய்யுளிரண்டாவதடி யிறுதிவ ரையும் ஸ்தலபுராணக்கதைகள் யாவுமமைந்துவிட் டிருந்தமை காண்க.

றெண்டப் பெருமான் காண வயன்மள்ள னைப்நடித்தவா தாபோற்றி, கருவினிகந் திடுதில்லை மறையோர் காணைக் கவின்றிருச் சிற்றம்பலத்தைக் கண்டாய்போற்றி, திருவிளங்கு காஞ்சிநதி தன்னைப்போக்கி தேவர்விடத்தாலயர்வு தீர்த்தாய் போற்றி 94

தீர்வுகண்ணுற் றரியபல விம்பிதங்கள் செறிந்திலகக் கொண்டபர சிவமேபோற்றி, போர்விலனைப் மால்பதியென் றுரைத்த வியாதற் குற்றபெருங் குற்றமதை யொழித்தாய் போற்றி, யார்வமுடன் விசுவாமித் திரனிறைஞ்சு மதற்கிரங்கி வரங்கள்பல வளித்தாய்போற்றி, போர்வியமற் குறாதரசு நிலைபெற் றுளப் பெருஞ்சூமேறான் றுக்கியவெம் பிரானேபோற்றி 95

பிரிவிலனைத் தொழுவேதன் காஞ்சிக் தீர்த்தம் பேசுநரின் ம்பற்றியுறத் தெரித்தாய்போற்றி, பரிவினொடு தெளிதவ நிலைசேர திக்கப் பலகேள்விக் கிறைபயக்கப் பணித்தாய் போற்றி, தெரிவுறனு முனைதன்பா லன்பா யாங்கு திருமணஞ்செய் தருளியவெந் தேவே போற்றி, புரிவிசய னேலவற்குத் தெய்வ யானை புதுக்களிநன் மணஞ் சூட்டும் புண்யா போற்றி 96

புண்ணியமெய்க் கலக்தசக்து வசனர் வேட்ட புத்திரப் பேறளித்தவருட் புனிதா போற்றி, நண்ணுதொழு நேயகன்று பணிகள்செய்து நற்குலசே கரனுய்தல் நயந்தாய் போற்றி, வண்ணமலி திரிகால வளவன் மாட்டுவந்தசெயிரறுத்தாண்ட மணியேபோற்றி, யெண்ணரிய வுபதேசமுமையாலன் மேவி யிடையருக் களிப்பெய்த விசைத்தாய் போற்றி 97

போற்றுமொரு திருநீற்று மேட்டுப் பூதி புனைந்தவர்கள்
வேண்டுவன புகுப்பாய் போற்றி, தேற்றியுளம் விசேடபூ
சைகள்செய் வார்க்குச் சித்திமுத்தி யளித்துமருள் செல்
வா போற்றி, கூற்றுவனை யுதைத்ததிருத் தாளின்மீது கு
லவுமறைச் சிலம்பணிந்த குழகா போற்றி, எற்றுவரிக்
கொடியுயர்த்த வெந்தாய் போற்றி யெழிற்பேரைப் பதிய
மர்ந்த விறைவே போற்றி 98

ஏந்துமொரு மரக்கலமாய்ப் பவநீரூறு மிரும்பிறவிச் சாக
ரத்தை யிகந்தே யேறித், தேர்ந்துளவ மாலவற்குந் தெரித
ரேற்றுத் தேங்கமலப் போதனநின் றிருத்தாண்மீது.
போந்தடியே னலமேவ வருளே கூடும் போதெந்தப் போ
துணைப் புகல்வா னையா, பாந்தண்முடி மீதணிந்த சிவ
னே பேரைப் பரம்பரனே பசுபதியே பவளக் குன்றே 99

குன்றமெறிந் தவனிலத்துங் குலிசப் புத்தேள் குலவுமொ
ரு நிலத்து மெழிற் கோபா லன்று, னின்றுவதி தருநிலத்
தும் வருணைப் புத்தே ணெடுநிலத்து முறுஞ் செல்வ மற
விட்டேகி, மன்றினடம் புரிகின்ற பெருமா னுள்ள மகிழ்
ந்தெதகத் தலத்தினுஞ் சீர்வாய்ந்த தென்று, சென்றடை
யுந்திருப்பேரு ரடைந்திவ் வேழை சேர்வரிய வவன்கரு
ணைத்திருப்பெற் றேனே 100

திருப்பேரூர் பதிற்றுப்பத்தந்தாதி

முற்றும்.

நடேசர் அச்சுயந்திரசாலை, கோயமுத்தூர்.
MAHAMAHOPADHYAYA